
# கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கு

### தொகுதி - 1



**தமிழ் உயராய்வு மையம்**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**

**மதுரை - 18**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள் தொகுதி 1 |
| நுவல் பொருள் | : | கிறித்தவ இலக்கியக் கட்டுரைகள் |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ.பாப்பி கமலாபாய், துறைத்தலைவர்<br>முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி<br>முனைவர் இரா. டயானா கிறிஸ்டி<br>முனைவர் இரா. ஏஞ்சல்<br>திருமதி பி. திவ்யா<br>திருமதி டே. ஆனி மரிய ஜான்சி |
| பதிப்பு | : | முதற் பதிப்பு, செப்டம்பர் 2018 |
| மொழி | : | தமிழ் |
| உரிமை | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18. |
| பக்கங்கள் | : | |
| அச்சிட்டோர் | : | ரேகா பிரிண்டர்ஸ் |
| நூல் அளவு | : | டெம்மி |
| நூல் வெளியீடு | : | தமிழ் உயராய்வு மையம்,<br>பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)<br>மதுரை - 18 |
| விலை | : | Rs. 300/- |

| | | |
|---|---|---|
| Name of the Book | : | Kirithava Ilakia Veliyil Manitha Mathipedugal<br>(Part I Research Articles) |
| Print | : | First print - September 2018 |
| Language | : | Tamil |
| Copy Right | : | Tamil Research Centre, Fatima College (Autonomous),<br>Madurai -18. |
| Pages | : | |
| Press | : | REGA Printers |
| Released by | : | Tamil Research Centre,<br>Fatima College (Autonomous), Madurai -18. |
| Price | : | Rs 300/- |
| ISBN | : | 978-93-87865-06-8 |

# பொருளடக்கம்



| வ. எண். | தலைப்பு | பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | திருவிவிலியச் சமத்துவம் | முனைவர் அஞ்சலி அன்னாபாய் இராஜசேகரன் | 1 |
| 2. | மனிதம் | திரு.அருள்ராஜ் திலக், அ. | 6 |
| 3. | நீதிமொழியில் அறம் | முனைவர் அலிஸ்ராணி, ப. | 8 |
| 4. | திருவிவிலியம் காட்டும் பெண்ணியச் சிந்தனை | திருமதி. அனிதா ஜூடிட், ஞா. | 11 |
| 5. | திருவிவிலியத்தில் பெண்கள் சார்ந்த மதிப்புகள் | முனைவர் அன்புராணி, செ. | 14 |
| 6. | "திருப்பாடல்கள்" முன்வைக்கும் இறை மன்றாட்டுகள் | செல்வி ஆனந்தவள்ளி, த. | 18 |
| 7. | சபைநூல் உணர்த்தும் உறவுநலம் | திருமதி. ஆனி மரிய ஜான்சி, டே. | 22 |
| 8. | விவிலியத்தில் மனித நேயச் சிந்தனைகள் | திரு. ஏசுதாஸ், வு. | 25 |
| 9. | மதிப்பீடு - மதிப்பு இழப்பு - மீள்மதிப்பீடு | முனைவர் ஏஞ்சல், இரா. | 27 |
| 10. | அன்பினால் இணைக்கப்பட்ட சகோதரத்துவம் | முனைவர் ஐவி ஜெனோ, சு. | 30 |
| 11. | திருவிவிலியத்தில் காட்டப்படும் மனித மதிப்பீடுகள் | முனைவர் கலையரசி, ம. | 32 |
| 12. | "லூக்கா நற்செய்தி" உவமைகள் வெளிப்படுத்தும் விழுமியங்கள் | செல்வி கற்பகவள்ளி, மு. | 36 |
| 13. | திருவிவிலியத்தில் மனித நேயம் | முனைவர் காந்திமேரி, எம்.எஸ். | 40 |
| 14. | கிறித்தவம் காட்டும் மனித மதிப்பீடுகள் | திரு. கிறிஸ்டியன் ஹீலர், தா. | 43 |
| 15. | இறைவேண்டலும் இனிய வாழ்வும் | திருமதி. சகாய ஹில்டா மேரி, டே | 46 |
| 16. | திருவிவிலியம் காட்டும் குடும்பம் குறித்த கட்டமைப்பு | முனைவர் சாந்தி, ப. | 49 |
| 17. | விவிலியத்தில் துகிலியலும் அது சார்ந்த மக்கள் வாழ்க்கை முறைகளும் | முனைவர் சாமுவேல் வெஸ்லி, தே. | 52 |
| 18. | திருவிவிலியத்தில் பெண்கள் (ரூத்து) | திருமதி. சிவகாமி, ம. | 58 |
| 19. | புதிய ஏற்பாட்டில் வாழ்வியல் நெறிகள் | முனைவர் சிவகாமி, ஆ. | 60 |
| 20. | விவிலியம் காட்டும் வாழ்வியல் | முனைவர் சுப்புலெட்சுமி, கோ. | 63 |
| 21. | முதிர்வயது - மனிதனின் கீழ்ப்படிதலும் கடவுளின் ஆசீர்வாதமும் | திருமதி சோபியா அடைக்கல மேரி,வ. | 65 |
| 22. | ஆதியாகமம் வழி கிறிஸ்தவமும் கீழ்ப்படிதலும் | முனைவர் டயானா கிறிஸ்டி, இரா. | 68 |
| 23. | திருவிவிலியத்தில் மனிதநேயம் | அருட்பணி முனைவர் டென்சன் எக்டர், இரா.செ. | 72 |
| 24. | திருவிவிலியத்தில் பெண்கள் நிலை | திரு.தட்சிணாமூர்த்தி, இரா. | 75 |
| 25. | நீதிமொழிகளும் திருக்குறளும் | செல்வி தேன்மொழி, அ. | 78 |
| 26. | திருவிவிலியம் காட்டும் அன்பும் சகோதரத்துவமும் | முனைவர் நிரஞ்சனா தேவி, இரா. | 83 |
| 27. | இயேசு காட்டும் மனித நேயம் | அருள்சகோ. பாத்திமா மேரி, ம. | 85 |
| 28. | திருவிவிலியம் தரும் அமைதிவாழ்வு | முனைவர் பாப்பி கமலாபாய், ஆ. | 88 |

# மதிப்பீடு - மதிப்பு இழப்பு - மீள்மதிப்பீடு

முனைவர் இரா. ஏஞ்சல்,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வுமையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை - 18.

மதிப்பு/மதிப்பீடு என்னும் இச்சொற்களுக்கான பொருள்களை அகராதிகள் அழகாக வெளிப்படுத்தலாம். ஆனால் நாம் நம் சொல், செயல் வழியாகப் பிறருக்கு நல்ல விதத்திலோ அல்லது |தீய விதத்திலோ பாதிப்புகளை விட்டுச்செல்லும் போது, அவை நன்மதிப்புகளாகவோ எதிர்மறை மதிப்புகளாகவோ உருவாக்கம் பெறுகின்றன. ஒரு விதத்தில் மனிதர்களின் பண்புகள் சமூகத்தில் அவர்களை நல்லவர்களாகவோ கெட்டவர்களாவோ மதிப்பிடுகிறது. இன்னொரு கோணத்தில் அவர்கள் ஆற்றும் பணிகள் அவர்களுக்குச் சமூகத்தில் மதிப்புகளைப் பெற்றுத் தருகின்றன.

கிறித்தவத் திருமறையான திருவிவிலியத்தில், 'சீராக் ஆகமம்' குறிப்பிடும் பணி அடையாளங்கள் குறித்தும் பணிகளின் மதிப்பு மற்றும் பணியாளர்களின் மதிப்பு இன்றைய காலகட்டத்தில் சிதைந்து வரும் தன்மை குறித்தும் மீண்டுமாய், இம்மதிப்பீடுகள் மதிப்புப் பெற வேண்டிய அவசியம் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

"கிறித்தவ இலக்கிய வெளியில் மனித மதிப்பீடுகள்" என்னும் பொருண்மை உடையதாய்த் தலைப்பு அமைந்திருப்பதால் கிறித்தவப் படைப்பாளிகளால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் இக்கட்டுரையில் அமைதல் வேண்டும் என்பது அவசியம். எனினும் கிறித்துவப் படைப்பாளிகளால் படைக்கப்பட்ட இலக்கியங்களுக்குத் "திருவிவிலியமே" மையமானதால், திருவிவிலியத்தில் இடம்பெறும் சீராக் ஆகமச் செய்திகள் மட்டுமே இக்கட்டுரைச் செய்திகளுக்கு முதன்மை ஆதாரமாய் அமைகின்றன.

**ஆசிரியர்**

ஆசிரியருக்கான இலக்கணம் மற்றும் ஆசிரியர் - மாணவர் உறவு குறித்து நன்னூலார் முதலாகப் பலர் நமக்குக் கூறியுள்ளனர். சமூகம் சிறப்புடைய ஆசிரியரின் பங்கு மிக மிக அவசியமாகும். ஆசிரியராகும் தகுதி யாருக்கு உரியதாகிறது எனின் விடாமுயற்சியுடன் அறிவைத் தேடுவோருக்கே உரியதாகிறது. அவரால்தான் பிறருக்குக் கற்பிக்க இயலும். மட்டுமன்றி, ஆசிரியப்பணிக்கு அறிவோடு கூட பொறுமை, சகிப்புத்தன்மை, நட்புணர்வு, மாணாக்கரைக் கலை மற்றும் கல்வியில் தூண்டுவிக்கும் இயல்பு, மாணாக்கர் தம் குறைகளைப் பொருட்படுத்தாது அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் தாய்மையுணர்வு போன்ற பண்புநலன்கள் தேவைப்படுகின்றன. ஏனெனில் அறிவு அனைவருக்கும் உரித்தானது. ஆனால் ஞானம் அதையும் தாண்டிப் புனிதமானது. ஞானம் உடையோரால் மட்டுமே அனைத்தையும் ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வுலகில் பிழைப்பிற்கான வாயில்கள் பல உள. ஆனால் ஆசிரியர் பணி பிழைப்பிற்கான பணி அல்ல: அழைப்பிற்கான பணி. ஏனெனில் **"தம்மீது அன்பு கூர்வோருக்கு அதை** (ஞானத்தை) **வாரி வழங்கியுள்ளார்"** (சீராக் ஆகமம்) கடவுள். ஆனால் இன்றைய காலகட்டத்தில், சமூகத்தில் ஆசிரியருக்கான மதிப்பீடு எதைச் சார்ந்து அமைகிறது? அவர் தம் பணி சார்ந்து அமைகிறதா? அல்லது பணம் சார்ந்து அமைகிறதா? என்பது சிந்தனைக்குரியதாக அமைகிறது. இச்சிக்கலைக் களைய,

(i) "கற்றுக் கொடுக்கும் பணியில் இருப்போர், ஒருபோதும் கற்றலை நிறுத்தக் கூடாது என ஆசிரியரும்

(ii) "ஆசிரியர் மட்டுமே என் நலம் விரும்பி" என மாணவரும் உணர்ந்தால் மட்டுமே சமூகம் நலம் அடையும்.

**துறவறத்தார்**

**"இல்லம் இளமை எழில் வனப்பு மீக்கூற்றம்**
**செல்வம் வலி என்றிவை எல்லாம் - மெல்ல**
**நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்**
**தலையாயார் தாம் உய்யக் கொண்டு" (நாலடியார், 53)** என்கிறது நாலடி.

இக்கருத்துக்களுக்கான ஆணிவேர்,